Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 324/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | நடேசன்(ஆய்வாளர்) |
| Father's Name | – | அய்யனார் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 01st March 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது கோவை மாநகரம் பீளமேடு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.03.2018 ம் தேதி தலைமை காவலர் 1672 திரு ஞானசுந்தரம் காவல் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது பொள்ளாச்சி செங்குட்டைபாளையம் கடைவீதியில் குடியிருக்கும் ஆறுச்சாமி என்பவர் மகன் ராமசந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய கு.எண். 39/2018 சட்டபிரிவுகள் 279, 337, 304(A) - இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

மேற்படி முதல் தகவலறிக்கை **அதசாஆ.3 ஆகும்.** வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பை காவல் ஆய்வாளராகிய என்னிடம் ஒப்படைத்ததை புலன் விசாரணைக்காக ஏற்றுக்கொண்டு 25.03.2018 ம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் காளிமுத்து, தங்கவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி மாதிரி வரைபடம் **அசாஆ.4** ஆகும்.

பின்னர் இவ்வழக்கில் இறந்து போன முருகேசன் என்பவரின் பிரேதத்தின் மீது பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து 25.03.2018 ம் தேதி காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அசா ஆ. 5** ஆகும்.

பின்னர் சாட்சிகள் ராமசந்திரன், ஆனந்தன், ஆரிச்சாமி, விஜய் , மணிகண்டன், தங்கவேல், மாரிமுத்து, காளிமுத்து மற்றும் கதிர்வேல் ஆகியோாகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் மேற்படி சடலத்தை சடலக்கூறாய்வுக்காக மகாலிங்கபுரம் காவல் நிலைய தலைமை காவலர் 1672 ஞானசுந்தரம் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். பின்னர் 28.03.2018 அன்று இவ்வழக்கின் எதிரியான KL 40 N 3669 BOLERO MAXI TRUCK என்ற வாகனத்தின் ஓட்டுநர் பெருமாள் என்பவர் காவல் நிலையத்தில் ஆஜரானவரை குற்றம் பற்றி கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன்.

இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனம் KL 40 N 3669 BOLERO MAXI TRUCK என்ற வாகனத்தையும், விபத்திற்குண்டான வாகனம் TN 37 CJ 5060 ACTIVA

என்ற இரு சக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பிவைத்தேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு சக்கர வாகனம் மற்றும் இரு சக்கர வாகனத்தை ஆய்வு செய்த பொள்ளாச்சி மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி செல்வதீபா அவர்களை விசாரித்து ஆய்வறிக்கையும் வாக்குமூலமும் பதிவுசெய்தேன்.

மேற்படி விபத்தை ஏற்படுத்திய KL 40 N 3669 BOLERO MAXI TRUCK வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அசாஆ.6** ஆகும். விபத்துக்குண்டான இரு சக்கர வாகனமான TN 37 CJ 5060 ACTIVA ன் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அசா ஆ 7** ஆகும்.

பின்னர் விபத்தில் காயம்பட்ட மாரிமுத்து என்பவருக்கு சிகிச்சையும், விபத்தில் இறந்து போன பெருமாள் என்பவரின் சடலத்தை சடலக் கூறாய்வும் செய்த பொள்ளாச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. பாரதிகண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கையும், காயச்சான்றிதழும் பெற்றேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் **அசா ஆ.** 8 ஆகும். மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை **அசாஆ. 9** ஆகும். விபத்து ஏற்படுத்திய L 40 N 3669 BOLERO MAXI TRUCK வாகனத்தின் ஓட்டுநர் பெருமாளை பணிக்கு அனுப்பிய திரு நந்தகோபால் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இவ்வழக்கின் முதல் தகவலறிக்கை பதிவுசெய்த தலைமை காவலர் திரு. ஞான சுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

பின்னர் 21.06.2018 ம் தேதி என்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது 279, 337, 304(A) சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக காண்பிக்கப்பட்டுள்ளவர்கள் இரண்டு பேர் என்றால் சரிதான், ராமசந்திரன் மற்றும் விஜய் இறந்து போன நபரின் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள வீட்டில் உள்ளவர்களை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் நான் புலன் விசாரணை செய்யும் பொழுது மேற்படி நபர்கள் சம்பவ இடத்தில் இல்லை. சம்பவம் நடந்த சாலை போக்குவரத்து ஓரளவு உள்ள சாலை என்றால் சரிதான்.

இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக காண்பிக்கப்பட்டுள்ளவர்கள் சம்பவத்தினை பார்க்கவில்லை என்றாலும் இவ்வழக்கிற்கு ஆதரவாக சம்பவ சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் வடக்கிலிருந்து

தென் திசையை நோக்கி ஓட்டி வந்தார் என்றால் சரிதான். அவ்வாறாக வரும் போது தனக்கு முன்னால் சென்ற நான்கு சக்கர வாகனத்தை திடீரென எதிரே வரும் வண்டியை கவனிக்காமல் முந்திச் செல்லும் போது அவரது அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து நடந்தது என்றாலும் அவ்வாறு அவர் தீடீரென ஓவர் டேக் செய்யமுற்பட்ட போது எதிரே வந்த வாகனத்தினை ஓட்டிய நபர் அதை கவனித்ததால் உடனடியாக அவரது வாகனத்தைஇடதுபுறமாக இழுத்த போது மேற்படி Bolero வாகனம் நிலை தடுமாறி கவிழ்ந்தது என்றால் சரியல்ல,

எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றாலும், இறந்த போன நபரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் எதிரியின் மீது தவறாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B.A.B.L.,)
Judicial Magistrate No. II,
Pollachi.